Oasis Grace
Engineering Projects Pvt Ltd
Build Your Future With Us
RTN.DR.R.SATHYANARAYANAN,
Director - Business Development
+91 9360136897 /
+91 8148231942
No.15, North Mada Street, Srinagar Colony, Saidapet, Chennai-600015
www.oasisgrace.in |
business@jmrgroup.org

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkural@gmil.com
RNI No.: TNTAM24840
உள்ளது உள்ளபடி

காலை 10 மணி முதல்
மதியம் 2 மணி வரை -
முதல் முறை இந்த
நோட்டரை
கொண்டுவருபவர்களுக்கு
சிகிச்சை இலவசம்
MM கிளினிக்
அரசு மூத்த மருத்துவ அதிகாரி
8668018731
அழகிரி நகர் மெயின் ரோடு,
வடபழனி, சென்னை - 26

காசநோயால் ஏற்படும் உயிரிழப்புகளைக் குறைப்பதில் இந்தியா சாதனை: மத்திய அமைச்சர் ஜெ பி நட்டா

சென்னை – 14 நவம்பர், 2026 இந்தியாவில் காசநோய் உயிரிழப்புகள் 2015-ம் ஆண்டிலிருந்து 38 சதவீதம் குறைந்துள்ளன. உலக அளவிலான உயிரிழப்பு சரிவு 35 சதவீதமாக உள்ள நிலையில், அந்த சராசரியைவிட இந்தியாவில் உயிரிழப்புகள் குறைந்துள்ளன. இந்தச் சாதனையை உலக சுகாதார அமைப்பின் 2026-ம் ஆண்டுக்கான உலக காசநோய் அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது. தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்திலும் காசநோய் உயிரிழப்பைக் குறைப்பதில் இந்தியாவின் பங்களிப்பை உலக சுகாதார அமைப்பு அங்கீகரித்துள்ளது.

இதுகுறித்து மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் ஜெ பி நட்டா விடுத்துள்ள செய்தியில், பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் காசநோய் ஒழிப்பு என்பது மக்கள் இயக்கமாக மாறியுள்ளது என்று கூறினார். காசநோயாளிகளுக்கு உரிய சிகிச்சை அளிப்பதில் இந்தியா 94 சதவீத வெற்றியைப் பெற்றுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் செயல்படுத்தப்படும் காசநோய் ஒழிப்பு இயக்கத்தின் மூலம் 25 கோடிக்கும் அதிகமானோர் பரிசோதிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார். 11 கோடிக்கும் மேற்பட்ட எக்ஸ்ரே பரிசோதனைகளும், 3 கோடி மூலக்கூறு பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். இதன் மூலம் 48.64 லட்சம் காசநோயாளிகள் கண்டறியப்பட்டுள்ளனர் எனவும் அறிகுறிகள் இல்லாத 14.97 லட்சம் பேருக்கும் நோய் கண்டறியப்பட்டு, ஆரம்ப நிலையிலேயே சிகிச்சை அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது எனவும் நட்டா கூறினார்.

காசநோயைத் தடுப்பது, முன்கூட்டியே கண்டறிவது, உரிய சிகிச்சை, ஊட்டச்சத்து உதவி வழங்குவது ஆகியவை மூலம் காசநோய் இல்லாத இந்தியாவை உருவாக்க மத்திய அரசு உறுதி பூண்டுள்ளதாக அமைச்சர் ஜெ பி நட்டா தெரிவித்தார்.